# <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் ஆளுநர் புகைப்பட அரங்கத்தினையும் (Perennial Photo Gallery Exhibition) இன்று (25.10.2018) ஆளுநர் மாளிகை வளாகத்தினை பிளாஸ்டிக் பைகள் இல்லாத வளாகமாக்க 'பிளாஸ்டிக்கை தவிர்த்து புற்றுநோயை தடுப்போம்' என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கரையும் வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் அவர்கள் ராஜ்பவனை பார்வையிடும் பார்வையாளர்களுக்காக ஆளுநர் அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் குறித்த புகைப்பட அரங்கத்தினை (Perennial Photo Gallery Exhibition) இன்று (25.10.2018) ஆளுநர் மாளிகையில் திறந்து வைத்தார்கள்.

இதனை தொடர்ந்து, ஆளுநர் மாளிகை வளாகத்தினை பிளாஸ்டிக் பைகள் இல்லா வளாகமாக மாற்றும் நோக்கில் அனைவரின் ஒத்துழைப்போடு முடிவு எடுக்கப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 'பிளாஸ்டிக்கை தவிர்த்து புற்றுநோயை தடுப்போம்' என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கரை வெளியிட்டார். பிறகு ராஜ்பவனில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு துணிப்பை மற்றும் ஸ்டிக்கர் வழங்கப்பட்டது. இது ஒரு முன்னோடியாகவும் மாதிரியாகவும் வழங்கப்பட்டது. பிறகு ஆளுநர் மாளிகையில் 26.10.2018 முதல் நுழைவு வாயிலில் பிளாஸ்டிக் பைகள் கொண்டு வருவது தடை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உத்தரவின்படி ராஜ்பவனில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சிறப்பு கண் பரிசோதனை முகாம் நடைபெற்று, பலருக்கு கண் பார்வை சரி செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிந்துரைத்ததன் பேரில் 79 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சியிலும் இன்று ஆளுநர் கலந்து கொண்டு கண் கண்ணாடிகளை பணியாளர்களுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துக் கொண்டார்கள்.

---

ராஜ்பவன், சென்னை-22 ஒம்/-

நாள் : 25.10.2018 இணை இயக்குநர் (ம.தொ)